விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 201 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 24 வெள்ளிக்கிழமை (08.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பெற்றோல் விநியோகத்தில் புதிய நடைமுறை
## யாழ்.மேலதிக அரச அதிபர் பிரதீபன் தலைமையிலான குழுவினர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஐ.ஓ.சி மூலம் பெற்றோல் வழங்குவதற்கு உரிய ஏற்பாடொன்றை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு அண்மையாகவுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்துக்கு நேரடியாகச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் நெருக்கடியற்ற முறையில் பெற்றோல் வழங்குவதற்கான நடைமுறையைக் கொண்டு வந்துள்ளனர்.

இக்குழுவில் யாழ்ப்பாண பொலிஸ் பொறுப்பதிகாரி, 512ஆவது பிரிகேற் கட்டளை அதிகாரி மற்றும் யாழ்.செயலக உத்தியோகத் 11

## கோட்டா உடன் வீட்டுக்குப் போ
# நாடெங்கும் நாளை பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

"கோட்டா உடன் வீட்டுக் குப் போ" என்ற கோஷத்துடன் நாளை சனிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி நகர்வது, சுற்றிவளைப்பது மற்றும் நாடெங்கும் தமது ஊர்களில் தெருக்களுக்கு வந்து அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என எதிர்க் கட்சிகள், காலிமுகப் போராளிகள், சிவில் சமூகத்தினர் ஆகியோருக்கு இடை 11

# நாட்டில் மீண்டும் அவசரகாலச் சட்டம்?
## மக்கள் போராட்டங்களை முடக்க அரசு ஆலோசனை

(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச் சட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச தலைவர் கோட்டா பய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி நாளை முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் போராட்டத்தை ஒடுக்கும் நோக்கில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

கோட்டாபயராஜபக்ஷ தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன, இராணுவத் தளபதி விகும் லியனகே ஆகியோர் கூடி இதுகுறித்து ஆராய்ந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் குறித்த கலந்துரை 11

## ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதிக்க முடியாது
### பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம்

(கொழும்பு)

கொழும்பு - கோட்டை, புறக்கோட்டை முதலான பகுதிகளில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதிக்குமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கை நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாளை அரசாங் 11

## அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிடலாம்
### பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன



(கொழும்பு)

அமைதியான முறையில் எதிர்ப்பில் ஈடுபடும் உரிமைக்கு பொலிஸார் எவ்வித தடையும் விதிக்க மாட்டார்கள் என பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன 11

## 300 லீற்றர் டீசலுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் சுமார் 300 லீற்றர் டீசலை பதுக்கி வைத் 11

## அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கில் திரண்ட பிக்குகள்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரத்திற்கு மேற்பட்ட பிக்குகள், கிறிஸ்தவ மதகுருமார்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை ஆரம்பித்துள்ளனர். 11



திங்கள் முதல்
## யாழில் வெதுப்பக உற்பத்திகள் முடங்கும்

5 ஆம் பக்கம் பார்க்க

## சனி, ஞாயிறு தினங்களில் நாடு முடக்கப்படலாம்?
### மக்கள் பயணங்களை தவிர்ப்பது நல்லது

(கொழும்பு)

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நாடு முடக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

நாளை சனிக்கிழமை அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற் 11

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் பணம் இல்லை
### மத்திய வங்கி

(கொழும்பு)

எரிபொருள் விலைகளை மறுசீரமைப்பு செய்வதற்கான விலைச்சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், டொலர் 11

## பொலிஸ், இராணுவம் கொழும்பில் குவிப்பு
### பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால் பதற்ற நிலை மற்றும் அவசர நிலை ஏற்படும் எனக் கருதி கொழும்பின் முக்கியபல இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டொலருக்கு எரிபொருள்

(கொழும்பு)

அத்தியாவசிய தேவைகளுக்காக டொலர் செலுத்தி எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்துகொள்வதற்கான வசதிகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியுள்ளது.

அதன்படி, பதிவு செய்வதற்கான வசதிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. (ம-7)

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகக் கோரி யாழில் நாளை சைக்கிள் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை பதவிவிலகக் கோரி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு துவிச்சக்கர வண்டிப் பேரணியொன்றை மேற்கொள்ள சிலபொதுஅமைப்புகளினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், செம்முகம் ஆற்றுகைக் குழு, தேசிய கலை இலக்கிய பேரவை, தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், குரலற்றவர்களின் குரல், பன்மைத்துவ மக்களாட்சி மன்றம், புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனிஸ கட்சி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகிய பொது அமைப்புகள் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

நாளை 9 ஆம் திகதி நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகளால் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலும் போராட்டத்தை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7.33)

## கண்ணீர் அஞ்சலி



எமது சிரேஷ்ட பிரதேச செய்தியாளர்
திரு. அ. இரகுபதி அவர்களின்
அன்புப் பாரியார்

திருமதி
**இரகுபதி மங்களேஸ்வரி**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரிக் குடும்பம்

# நயினை தியாகராசா காலமானார்



(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பரம்பரை அறங்காவலரும் ஆலய அறங்காவலர் சபையின் நீண்டகால தலைவராகவும் இருந்த ஆ. தியாகராசா நேற்றுக் காலமானார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவராக நீண்டகாலம் அரும் பணியாற்றிய இவர் வேலணை உதவி அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்றவராவார். (ம-7)

# இலங்கைக்கு உதவுங்கள் கட்டார் தூதுவரிடம் சஜித்

(கொழும்பு)

இலங்கை நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கு உதவுமாறு கட்டார் தூதுவரிடம் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான கட்டார் தூதுவர் ஜஸீன் பின் ஜாபர் ஜஸீம் அல் சரூர் நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மரண அறிவித்தல்



**இரகுபதி மங்களேஸ்வரி**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 37/1, சிவநகர் உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட இரகுபதி மங்களேஸ்வரி அவர்கள் நேற்று (07.07.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.07.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல. 37/1, சிவநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4583)

தகவல் :-
இல. 37/1, சிவநகர்,
உருத்திரபுரம்.
அ. இரகுபதி குடும்பத்தினர்
( ஆயுர்வேத வைத்தியர் )

## கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஓய்வுநிலை
அதிபர் திருவாளர் **காசிப்பிள்ளை தவராசா**
அவர்களின் பாசமிகு துணைவியார்

அமரர்
**சரஸ்வதிப்பிள்ளை தவராசா**

அவர்கள் இறைபதமுற்ற செய்தி கேட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா அம்பிகையின் திருவடியில் நித்தியானந்த பேருவகை பெற்று விளங்க பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர் அவர்களின் பணியில் தொடரும்
அதிபர்கள், ஆசிரியர்கள்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

(C-4584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் நியமனம்



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக போல் ஸ்டீபன்சை, அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் நியமித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள அவுஸ்திரேலியாவின் ஐ.நா.விற்கான நிரந்தர அலுவலகத்திலும் பல நாடுகளின் தூதுவராகவும் இவர் பணியாற்றியுள்ளார். (நி-6)

# பணவீக்கம் 70 சதவீதமாக அதிகரிக்கும்

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி தனது கணிப்புகளின்படி அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் 70 சதவீதமாக அதிகரிக்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

எவ்வாறாயினும், அந்த கணிப்புகளின்படி, 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பணவீக்கம் கணிசமாகக் குறையக்கூடும் எனவும் தற்போதைய கொள்கை நடவடிக்கைகளே இதற்கு காரணம் எனவும் இலங்கை மத்திய வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இந்த முன்னறிவிப்புகளில், உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை குறைப்பு பற்றிய அனுமானங்களும் உள்ளடங்குவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கத்தை பலப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன்இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களில் கணிசமான முன்னேற்றம் காணப்படுவதாகவும் மத்திய வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)



# எரிபொருள் விவகாரம்

## ரஷ்யப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

இலங்கைக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். குறித்த இருவரும் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் தொலைபேசி ஊடாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையில் தற்போது எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வுகாணும் நோக்கில் எரிபொருள் வழங்கி உதவுமாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# எரிபொருள் சூத்திரத்தில் சதி வெளிச்சத்திற்கு வந்த தகவல்

(கொழும்பு)

200 ரூபாவிற்கும் குறைந்த விலையில் எரிபொருளை வழங்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோப் குழு கூட்டத்தில் கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், "பெற்றோலியக் கூட்டுதாபனம், இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்கும் போது பிரச்சினை ஒன்று உள்ளமை தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்த போது, குறித்த அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள சூத்திரமானது, எந்தவித அடிப்படை தன்மையும் இல்லாமல் உள்ளதோடு அதற்கமைய விலை திருத்தம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்கமைய, கடந்த இரண்டு மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கான கட்டணம் மற்றும் அதற்கான வரி என்பன தொடர்பில் நாம் ஆராய்ந்துள்ளோம். அவற்றுக்கு இடையில் 150 ரூபா முதல் 200 ரூபா வரையான வித்தியாசம் காணப்படுகிறது", எனக் தெரிவித்தார். (நி-6)

# சடலங்களை எரிப்பதில் பாரிய நெருக்கடி

(கொழும்பு)

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மலர்ச்சாலை உரிமையாளர்களும் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என இலங்கை மரண சடங்குகளுக்கான பணிப்பாளர்கள் சங்கத்தின் ஸ்தாபகர் கவிந்து பனாகொட தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் வரிசைகளில் காத்திருந்தாலும், போதுமான அளவு எரிபொருள் கிடைப்பதில்லை.

இந் நிலை தொடருமானால், எதிர்வரும் நாட்களில் வீடுகளிலும் மருத்துவமனைகளிலும் சடலங்கள் நிரம்பிக் கிடக்கக்கூடும் என அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, எரிபொருள் பற்றாக்குறையினால் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்வதிலும் பின்னர் வீடுகளுக்கு கொண்டு செல்வதிலும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக கொழும்பு மாநகர திடீர் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி இரேஷா சமரவீர தெரிவித்தார். (நி-6)

# முன்னெடுக்கப்படவுள்ள போராட்டங்கள் கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்


(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தினால் இன்று கொழும்பில் எதிர்ப்பு பேரணி நடத்தப்படவுள்ளது.

அதேநேரம், நாளை கோட்டா கோ கம போராட்டக்காரர்களுடன் இணைந்து எதிர்க்கட்சியினரும் போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி செயலகம், டெம்பிள் லேன், பிரதமர் இல்லம் மற்றும் பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதி செய்து பொது ஒழுங்கை முகாமைத்துவம் செய்யுமாறு கட்டளை அதிகாரி விசேட அதிரடிப் படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (நி-6)

# இலங்கைக்கான பயண எச்சரிக்கையால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் அபாயம்



(கொழும்பு)

இங்கிலாந்து, நியூசிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளின் இலங்கை தொடர்பான பயண நிலைப்பாடுகள் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி ஏற்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இங்கிலாந்தும், நியூஸிலாந்தும் இலங்கைக்கு செல்வதற்கு எதிராக தங்கள் குடிமக்களுக்கு புதிய எச்சரிக்கைகளை வழங்கியுள்ளன.

பொருளாதார நெருக்கடி மோசமடைதல் மற்றும் உள்நாட்டு அமைதியின்மைக்கான சாத்தியக்கூறுகள் இதற்கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளன.

அதேநேரம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, அயர்லாந்து ஆகியவைகளால் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட பயண ஆலோசனைகளைத் தொடர்ந்து பேணப்படுகின்றன.

எனவே இந்த நிலைப்பாடு, நாட்டில் ஏற்கனவே பின்னடைவைக் கண்டுள்ள சுற்றுலாத்துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. (நி-6)

# விமான சேவையை நிறுத்தும் துருக்கி

(கொழும்பு)

துருக்கி விமான சேவைக்கு சொந்தமான விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்வதை நிறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன் காரணமாக பெலாரஸ் நாட்டில் இருந்து துருக்கி ஊடாக இலங்கை வரவிருந்த 19 பேர் அந் நாட்டில் சிக்கி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# கடவுச்சீட்டு வரிசையில் குழந்தையை பிரசவித்த தாய்

(கொழும்பு)

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு திணைக்களத்தில் கடவுச்சீட்டு வரிசையில் காத்திருந்த கர்ப்பிணி தாயொருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை குழந்தையை பிரசவித்துள்ளார்.

கடவுச்சீட்டு பெற வந்த ஹற்றனைச் சேர்ந்த பெண்ணுக்கே இவ்வாறு குழந்தை பிறந்துள்ளது.

வரிசையில் நின்று பிரசவ வலியால் துடித்த கர்ப்பிணிப் பெண்ணைப் பார்த்த இராணுவ வீரர்கள், அவரை காசல் மருத்துவமனையில் அனுமதிக்க ஏற்பாடு செய்தனர்.

அதற்குள் அவருக்கு குழந்தை பிறந்துவிட்டதாகவும் இந்த நிலையில், தாயும் கைக் குழந்தையும் நலமுடன் இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# கோழி இறைச்சி,முட்டை விலை மேலும் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

எரிபொருள் பிரச்சினை உட்பட பொருளாதார நெருக்கடி காரணமாக கோழி இறைச்சியின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள சிறு மற்றும் நடுத்தர விலங்கு பண்ணைகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை மூடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 4,000 க்கும் அதிகமானோர் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக விலங்கு பண்ணை பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் 3,200 ரூபாவாக காணப்பட்ட கோழி தீவனம் பொதி ஒன்றின் விலை 13,000 ரூபா வரையில் அதிகரித்துள்ளதால், கோழி இறைச்சிக்கு கடும் தட்டுபாடும் நிலவியுள்ளது. அத்துடன் முட்டை உற்பத்தியும் குறைந்துள்ளது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் கோழி இறைச்சி,முட்டை விலை மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகளுக்கு எதிரான தொடர் கப்டனாக ஷிகர் தவான்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு இந்திய அணியின் கப்டனாக ஷிகர் தவான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் முடிந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இருபது-20 மற்றும் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது.

அதன்பின்னர் ஜூலை 22 ஆம் திகதி தொடங்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிக்கு கப்டனாக ஷிகர் தவான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். துணை கப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த தொடரில் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்ப ட்டுள்ளது. ருதுராஜ் கெய்க வாட், சுப்மன் கில், தீபக் ஹூடா போன்ற இளம் வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ரிஷப் பண்ட்டிற்கு பதி லாக விக்கெட் கீப்பராக இஷான் கிஷ ன் அல்லது சஞ்சு சாம்சன் ஆகிய இருவரில் ஒருவர் செயற் படுவர். சுழற்பந்து வீச்சுக்கு சஹால், அக்சர் படேலும் வேகப் பந்து வீச்சுக்கு ஆவேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ், அர்ஷிதீப் சிங், ஷர்துல் தாக் கூரும் இடம்பெற்றுள்ளனர். (4)

# குடும்பத்தினருடன் லண்டனில் பிறந்தநாள் கொண்டாடிய டோனி





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் டோனி தனது 41 ஆவது பிறந்தநாளை நேற்று அமர்க்களமாக கொண்டாடியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டனும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தற்போதைய கப்டனுமான டோனி லண்டனில் தனது மனைவி சாக்ஷி மற்றும் மகள் ஜிவாவுடன் உள்ளார்.

7ஆம் திகதியான நேற்று அவருக்கு 41 ஆவது பிறந்தநாள் ஆகும், இதையடுத்து அவர்களுடன் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார்.

இந்த கொண்டாட்டத்தில் இந்திய அணி விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட்டும் கலந்து கொண்டார். மேலும் சில முக்கிய பிரபலங்களும் கலந்து கொண்டனர். (4)

# விம்பிள்டன் டென்னிஸ் அரையிறுதிக்கு நடால்



விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால், அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்சை எதிர் கொண்டார். இப்போட்டியில், ரபேல் நடால் 3-6, 7-5, 3-6, 7-5, 7-6 என்ற செட் கணக்குகளில் போராடி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இதே போல மற்றொரு காலிறுதிப் போட்டியில், அவுஸ்திரேலியாவின் நிக்கிர்கியோஸ், சிலியின் கிறிஸ்டியன் கரினை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார். (4)




## டிலோன்

ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு காசு கொடுக்கலைன்னா மாவு ஆட்ட சொல்ற மாதிரி



பேங்க்ல லோன் வாங்கிட்டு பணம் கட்டலனா பேங்க் வேலை கொடுத்தா நல்லா இருக்கும்

## சயிந்தினி

மாப்பிள்ள வண்டிய நேரா குற்றாலத்துக்கு விடு .... அங்க சீசன் ஆரம்பிச்சிடுச்சாம்...! நம்ம சொந்த பந்தமெல்லாம் நெறைய பேர் அங்க இருக்காங்க... அவங்க கூட சேர்ந்து என்ஜோய் பண்ணலாம்...!



## ராகவன்

இருவருக்கும் 108 வயது பள்ளி தோழிகள் இருவரும் சந்தித்துக் கொண்ட அழகிய தருணம்



## ஹரினா

கோபத்தை போக்க ஒரு எளிய வழி இருக்கு



உங்களின் கோபமான முகத்தை கண்ணாடியில் பார்க்கவும் ஜென்மத்துக்கும் கோபம் வராது

## வம்வன்

போய் எருமை மேய் ...அப்பதான் உனக்கு புத்தி வருமுன்னு சொன்னாங்க...



நீங்க இவ்வளவு அறிவாக இருக்கிறீங்களோ... எத்தன எருமை மேய்சீங்கன்னு கேட்டதற்கு நீக்க வச்சிட்டாங்க

## சாவித்திரி

ஆன்லைனில் பிரியாணி ஆர்டர் பண்ணிட்டு காத்திருக்கும் போது திடீரென்று நண்பன் வருவதைப் பார்க்கும் மொமெண்ட்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட வெதுப்பகங்கள் திங்கள் முதல் முடங்கும்

## வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளை தொடர்ந்தும் எம்மால் உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், இயற்கை அனர்த்தங்கள் உருவாகும் போது எமது உதவியை மாவட்ட செயலகத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தற்போது எம்மை கைவிட்டுள்ளனர். நாம் எமக்கு டீசலை பெற்றுத்தரக்கோரி பல தடவை கோரிக்கை விடுத்தும் அதற்கு யாரும் செவிசாய்க்கவில்லை. இந்நிலையில் தொடர்ந்து எம்மால் வெதுப்பாக உற்பத்திகளை செய்ய முடியாது.

கறுப்புச் சந்தையில் டீசலைப் பெற்று மக்களுக்கு வெதுப்பக உற்பத்திகளை வழங்க முடியாது. இறுதியாக நாம் டீசலை பெற்றுத்தரக்கோரி இராணுவத்தினரின் உதவியை நாடவிருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-6-18-33)

# குடிநீர் பெற்றுத்தர கோரி பூநகரி மக்கள் போராட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 200 குடும்பங்கள் தமக்கு குடி தண்ணீர் பெற்றுத்தரக்கோரி நேற்று கனவயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஞானிமடம், செட்டிய குறிச்சி, செம்மன்குளம், சித்தங்குறிச்சி ஆகிய கிராமங்களில் 200 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குறித்த பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்டகாலமாக நிலவி வருகிறது.

குறித்த பகுதி மக்கள் பூநகரி பிரதேச சபையின் பௌசர் மூலம் பணத்திற்கு நீரைப்பெற்று வந்த நிலையில் தற்போது எரிபொருள் பிரச்சினை காரணமாக பிரதேச சபையும் ஏனைய தனியாரும் நீர் விநியோகிப்பதை நிறுத்தியுள்ள நிலையில் குறித்த பகுதி மக்கள் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவைக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நீர்க்குழாய்களை பொருத்தியுள்ள நிலையில் நீர் விநியோகிக்கப்படவில்லை

தமக்கான குடிநீரை விரைவாக தர வலியுறுத்தியே இவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் மூன்று கிலோ மீற்றருக்கு பேரணியாக பூநகரி பிரதேச செயலகம் வரை சென்று பூநகரி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளரிடம் மகஜரும் கையளித்தனர். (4-6-315-316)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருக் கயிலைக்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.
(படம்:-ரவிசாந்)

## எரிபொருள் பெற்று தருமாறு

# தனியார் பேருந்து சேவையினர் கிளி.அரச அதிபருக்கு கடிதம்



(முறிகண்டி)

தனியார் பேருந்து சேவையை தடையின்றி முன்னெடுக்க எரிபொருள் பெற்று தருமாறு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் குறித்த கடிதம் நேற்று காலை மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி அரச பேருந்து சாலையில் எரிபொருள் வழங்க கோரி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் தனியார் பேருந்து சேவையினருக்கு அரச பேருந்து சாலைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் வகையிலான சுற்று நிருபம் வெளியிடப்பட்டிருந்தது.

ஆயினும் அன்றைய தினம் டீசல் வழங்காது அரச பேருந்து சாலையினரால் இழுத்தடிப்பு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு மறுநாள் டீசல் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் டீசல் வழங்க அரச பேருந்து சாலையினர் மறுத்த நிலையில் நேற்று மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து தமது சேவை தடையின்றி நடைபெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடிதம் ஒன்றை கையளித்தனர். (4-6-100-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 360 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 600 |
| தக்காளி | 300 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 260 | 160 |
| கோவா | 260 | 280 | 300 | 400 |
| கரட் | 250 | 330 | 400 | 400 |
| பூசணி | 240 | 200 | 260 | 260 |
| புடோல் | 160 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 460 | 500 |
| வெண்டைக்காய் | 200 | 160 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 350 | 260 | 260 | 350 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 300 | 250 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 360 | 300 |
| போஞ்சி | 350 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 400 | 450 |
| முள்ளங்கி | 160 | 150 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 80 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பத்துத் துவிச்சக்கர வண்டிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. (படம்: ரவிசாந். சிவசாந்தன்)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி ஆலய முன்றலில் இடம்பெற உள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)



S.K.நாதன் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் யாழ். போதனா மருத்துவமனைக்கு 8இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: சிவசாந்தன். ரவிசாந்)

# கல்வியங்காட்டில் வீடு புகுந்து சைக்கிள், பெற்றோல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் வீடு புகுந்த திருட்டுக்கும்பல் ஒன்று பெற்றோல் மற்றும் துவிச்சக்கர வண்டி என்பவற்றை திருடிச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு - புதிய செம்மணி வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது. குறித்த வீட்டார் வீட்டில் இருந்த துவிச்சக்கர வண்டியை காணவில்லை என தேடிய போதே. மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோல் திருடப்பட்டு உள்ளமையையும் கண்டறிந்தனர்.

அதனை அடுத்து வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கமராவில் பரிசோதித்த போது . வீட்டினுள் நுழைந்த திருடன் துவிச்சக்கர வண்டியையும் , மோட்டார் சைக்கிளில் இருந்த பெற்றோலையும் திருடிக்கொண்டு செல்வதனை அவதானித்துள்ளனர். (4-6-18-33)

# ஏல விற்பனை


(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் மற்றும் கண்டகற்கள் நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளை 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் மற்றும் கண்டகற்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணல் மற்றும் கண்டகற்களை அன்றைய தினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# ஹாட்லிக் கல்லூரி மாணவனால்

# கலப்பு வகை சைக்கிள் கண்டுபிடிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வச்சந்திரன் சிறிமன் கலப்பு வகையில் துவிச்சக்கர வண்டி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் மோட்டார் பொருத்தியும் மீள் சுழற்சி பொருட்களை பயன்படுத்தியும் புத்தாக்கத்தில் அதனை உருவாக்கியுள்ளார். குறித்த கலப்பு துவிச்சக்கர வண்டி அறிமுக விழா நேற்று முன்தினம் புதன்கிழமை இளம் புத்தாக்குநர் கழக இராஜ அரவிந்தன் தலைமையில் ஹாட்லிக் கல்லூரி ஆய்வுகூட மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் பாடசாலை அதிபர் தம்பையா கலைச்செல்வன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஹைபிரிச் துவிச்சக்கர வண்டியை அறிமுகம் செய்து வைத்தார்.

தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறான கண்டுபிடிப்பு மிக முக்கியத்துவம் பெறுவதாக பலராலும் தெரிவிக்கப்பட்டது. (4-6-33-60)

# கெற்பேலியில் வாள்வெட்டு மூவர் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி மத்தி மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தந்தை மற்றும் மகள் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இரவு 8 மணியளவில் வாள்களுடன் நுழைந்த குழுவொன்று வீட்டில் இருந்த 40 வயதான தந்தை மற்றும் 18 வயதான மகள் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தந்தையார் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் கெற்பேலி மத்தி பகுதியைச் சேர்ந்த 20 வயதான இளைஞன் ஒருவரும் நேற்று முன்தினம் இரவு வாள் வெட்டுக் காயங்களுடன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# இராசிபலன்

08.07.2022
ஆனி 24, வெள்ளிக்கிழமை
நவமி பிற்பகல் 1.40மணிவரை
சித்திரை முற்பகல் 8.23 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், சில மனஸ்தாபங்களும் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**கன்னி:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நிலையில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பக்கபலமாக இருப்பவர்கள் உங்களுக்கு அனுசரணையாக இருப்பர்.

**தனுசு:** நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** விரதம் வழிபாடுகளில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும்.

**கும்பம்:** அலுவலகப் பணிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பிறர் உதவியுண்டு.

**மீனம்:** தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, சேமிப்பில் சிறிது கரையலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

உனது வார்த்தை மற்றவர் செவியில் தேன் போல பாயட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் பாரிய நெருக்கடிக்குள்ளாகும் மக்கள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை காணப்படுவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார். மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் சுகாதார சேவைக்கு கடுமையான அழுத்தங்கள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் காணப்படும் பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக மருத்துவமனைகளின் செயற்பாடுகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வீட்டில் இருந்தவாறே பணி
## கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானம்

(கொழும்பு)

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வீட்டில் இருந்தவாறே பணியாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். அதுல சீலமானாராச்சி இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக பணியிடங்களுக்கு செல்லாமல் வீட்டிலிருந்தே பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பணிப்பகிஷ்கரிப்பில் குதிக்கும் இ.போ.ச. ஊழியர்கள்

(கொழும்பு)

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களின் போக்குவரத்துக்கு எரிபொருள் வழங்கப்படாவிட்டால் இன்று முதல் இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை போக்குவரத்து சேவையாளர் சங்கத்தின் தலைவர் சேபால லியனகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக, இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் ஊழியர்கள், சேவைக்கு சமுகமளிக்க முடியாதுள்ளது.

பல மாதங்களுக்கு முன்பே இந்த விடயம் தொடர்பில், அதிகாரிகளுக்கும் போக்குவரத்து அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டபோதிலும் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாவிட்டால், இன்று நண்பகல் 12 மணிமுதல் சேவைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# போதைப்பொருள் கடத்தல்காரரின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாரியளவில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் 80 பாதாள உலக குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்குவதற்குரிய நடவக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினரால் இதுதொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த 80 பேரில் பலரும் நாட்டினை விட்டு வெளியேறி தற்போது வெளிநாடுகளில் வசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் இவர்கள் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 32 குற்றவாளிகளின் சொத்துக்கள் ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: சூரி 12 செவ் 11 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு:படித்த குணமான பெண்
தொ.இ: B/10164

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: 22 ½ சூரி 8 செவ் 1 இல்
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது
தொ.இ: B/10168

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: சூரி 7 செவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: மின் ஒட்டுதல் (வெல்டர்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10172

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 40 ½ சூரி 8 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BFD ஆசிரியர்
எதிர்பார்ப்பு :அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/11893

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 32 சூரி 11 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc,SLAS இலங்கை நிர்வாக சேவை
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/10595

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 21 ½ சூரி. செவ் 11 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBA, HND in Business Management Marketing Officer
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10597

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: ¾ சூரி 5 செவ் 3 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ:G/10601

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: சூரி 10 செவ் 1 இல்
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: மருத்துவத்துறை பட்டதாரி மருத்துவர் ஜேர்மன் PR
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/10624

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# யாசகம் பெறும் மனநிலை அதிகரிப்பு
## மானுடவியல் சிரேஷ்ட பேராசிரியர் தகவல்

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் முக்கால்வாசி மக்கள் வறியவர்களாக மாறியுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் யசஞ்சலி தேவிகா ஜயதிலக்க தெரிவித்துள்ளார். இதனால் சமூகத்தில் யாசகம் பெறும் மனநிலை அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

# இலங்கையின் நெருக்கடிக்கு சீனாவின் கடன் பொறியே காரணம்
## தாய்வான் சாடல்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடன்பொறியே காரணம் என தாய்வானின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் ஜோன் ஓ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சீனாவும் காரணம் என தெரிவித்துள்ள அவர் இலங்கையின் 1948 சுதந்திரத்தின் பின்னர் ஒருபோதும் இல்லாத இந்த நெருக்கடி சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்தினால் உருவாகும் கடன்பொறியின் விளைவுகளை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# இலங்கைக்கு உதவும் எண்ணம் எம்.சி.சி.க்கு இல்லை
## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கைக்கு உதவும் வகையில் மிலேனியம் செலஞ் கோர்ப்பரேஷன் நிறுவனத்திடம் (எம்.சி.சி.) இருந்து தற்போது எந்த நிதியுதவி ஏற்பாடுகளும் இல்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.



ஏற்கனவே குறித்த திட்டத்தை இலங்கைக்கு வழங்கியபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாமை ஏமாற்றமளித்தது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் எப்போதாவது இந்த நிதியுதவி திட்டம் இலங்கைக்கு வழங்கப்படலாம் என்றும் எனினும் தற்போதைக்கு எந்த நிதியுதவி ஏற்பாடுகளும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## மனித இயல்புகள்

வீரபுரி மன்னன் திடீரென இறந்து போகவே அவனது பதினாறு வயது மகன் சிம்மாசனத்தில் அமர்ந்தான். உலக அனுபவமே சற்றும் இல்லாத அந்த இளம் மன்னனிடம் ராஜகுரு "ஆட்சி புரிபவன் ஒரு மனிதனிடம் எவ்வளவு மனித குணம் உள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இதுபற்றி எனக்கு அவகாசம் கிடைத்த போதெல்லாம் நான் உனக்குச் சொல்கிறேன். கேட்டுக் கொள்" என்றார்.

இதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று மன்னன் கேட்கவே ராஜகுருவும் "உன்னிப்பாக கவனித்து வந்தால் கொஞ்ச காலந்தான் பிடிக்கும்" என்றார். அதன்பின் அரண்மனையிலுள்ளவர்களும் அதிகாரிகளும் தம் அனுபவங்களை மன்னரிடம் அவ்வப்போது கூறிவர அவர் ஏற்பாடு செய்தார்.

ஒருமுறை அரசாங்க ஒற்றன் ஒருவன் வந்து மன்னனிடம் "அரசே நான் ஒரு காட்டின் வழியே போய்க் கொண்டிருந்த போது காலில் முள் தைத்தது. நான் நொண்டிக் கொண்டே போகையில் ஒருவன் ஓடி வந்து "புலி வருகிறது தப்பி ஓடு" எனக் கூறிவிட்டு ஒரு மரத்தின் மீது ஏறிக் கொண்டான். நானும் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். சற்று நேரத்திற்குப் பின் புலி அவ்வழியே போயிற்று பிறகு இருவரும் மரங்க்ளிலிருந்து இறங்கி அவரவர் பாதையில் சென்றோம்" என்றான்.

அப்போது ராஜகுரு "ஒற்றனை எச்சரித்த மனிதனிடம் மனிதத் தன்மை நாலில் ஒரு பங்கு உள்ளது. அவன் இவனை எச்சரித்தானேயொழிய காப்பாற்ற முயலவில்லை. தன்னை காத்துக் கொள்ளத்தான் மரத்தில் ஏறிக் கொண்டான்" என்றார்.

மற்றொரு முறை இன்னொரு ஒற்றன் வந்து மன்னனிடம் ஒரு ஏழை மனி தன் சாப்பிட வழியில்லாமல் ஒரு பணக்காரனின் வீட்டின் முன் மயங்கி விழுந்து விட்டான். பணக்காரன் அவனது மயக்கத்தைப் போக்கிச் சாப்பாடு போட்டு அவனைத் தன்னிடம் வேலைக்கு வைத்துக் கொண்டான். ஒருநாள் பணக்காரன் அவனை அடித்துக் கொண்டிருக்கவே அவ்வழியே போன ஒருவன் "அவனை ஏன் அடிக்கிறாய்?" என்று கேட்டான்.

பணக்காரனும் "இவன் பசியால் வாடிய போது சாப்பாடு போட்டு வேலை கொடு த்து என் அடிமை என்று பத்திரமும் எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறேன். இந்த அடிமையை என் இஷ்டம் போல நடத்துவேன் " என்றான். அந்த வழிப்போக்கன் பணக்காரனிடமிருந்து அடிமைப் பத்திரத்தை வாங்கிப் பார்த்து அதைக் கிழித்து எறிந்தான்.

பிறகு ஏழையிடம் "இனி நீ இவன் அடிமை இல்லை. நீ எங்கு வேண்டுமானாலும் போ எனக் கூறினான்" என்று சொன்னான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## யார் அந்த தேவதை?



தலையை நிமிர்த்தி நடக்கவும் முடியும். போர்க்களத்தில் சண்டையிட்டால் வெட்டுண்ட எங்கள் தலையை வேறு யாராவது தான் நிமிர்த்தி வைக்க வேண்டும். புலவராயிற்றே, மொழியில் விளையாடுகிறீர்கள் எனக்குக் கழிச்சண்டைப் பயிற்சி தான் இருக்கிறது மொழிச் சண்டைப் பயிற்சி இல்லை

ஆஹா, நீங்களும் மொழியில் விளையாடுகிறீர்களே! அரசன் சட்டென்று அமைதியானான். சில கணங் கள் தீவிரமாக அவன்எதையோ யோசிப்பது போலப்பட்டது.

பிறகு சாத்தனாரைப் பார்த்து, புலவரே. நாம் மலைவளம் பார்க்க வலம் வந்தபோது அந்த மக்கள் ஒரு பாட்டுப் பாடினார்களே கவனித்தீர்களா?

வேங்கை மரத்தின் அடியில் மலைவாழ் மகளிர் பாடியதைத்தானே சொல்கிறீர்கள்? அதே தான்.

அது குரவைக் கூத்து. அந்தப் பாட்டில் ஒரு விசேஷம் கவனித்தீர்களா?" ஆமாம். நல்ல இனிமையான இசை. நாட்டுப் பாடல்களுக்கென்று ஒரு மயக்கும் ராகம் இருக்கிறது

இசையைவிட அவர்கள் பாட்டின் அர்த்தம் தான் என்னை யோசிக்க வைத்துவிட்டது"

அப்படியென்றால்? ஒரு பெண்ணைப் பற்றி அவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள் இல்லையா?

ஆம்.அவளை வழிபட்டால், கன்னியருக்கு நல்ல கணவன் கிடைப்பான். பிரிந்து போன கணவன் திரும்ப வருவான். நித்திய சுமங்கலிகளாகப் பெண்கள் வாழலாம் என்றெல்லாம் அவர்கள் பாடினார்கள். இல்லையா?

ஆம் அரசே! தெய்வமாக எண்ணி அவர்கள் வழிபடத் துடிக்கும் அந்தப்பெண் யார்? அவர்களின் கற்பனையா அல்லது உண்மையிலேயே வாழ்ந்த பெண்ணா?"

சீத்தலைச் சாத்தனாரிடம் இருந்து ஒரு பெரு மூச்சு வெளிப்பட்டது. சில கணங்கள் பேச்சில்லை. இதமான தென்றலின் ஒரு கொத்து அவர்கள் மேனி வருடிச் சென்ற கணத்தில் சாத் தனார் சொன்னார்.

'நிஜம் தான் மன்னா. இரத்தமும் சதையுமாக நம்மிடையே வாழ்ந்த பெண்தான் அவள்! அவள் பெயர் கண்ணகி.

வாழ்க்கையுடன் பெரும் போராட்டம் நிகழ்த்தியவள்.அவளது வெற்றி வலிமிகுந்தது அப்படியா?

மதுரை நகர மக்களிடம் அவள் தான் செய்த சபதத்தில் ஜெயித்துக் காட்டினாள் என்பது உண்மைதான் பெண்கள் அத்தனை பேரும் அவளைத் தெய்வமாகக் கொண்டாடுவதும் உண்மை தான்.

ஆனால் இளங்கொடி போன்ற அந்தப் பெண் இந்தப் பூவுலக வாழ்க்கையில் கண்டதெல்லாம் ஏமாற்றமும் துன்பங்களும் வாட்டும் விரகமும் தான்.

என்ன சொல்கிறீர்கள் சாத்தனாரே? கண்ணகி வாழ்க்கையுடன் போராடி ஜெயித்தவள் என்று தானே சொன்னீர்கள். இப்போது ஏமாற்றம் என்கிறீர்களே?

"ஆம், அதுதான் அவள் வாழ்வில் நடந்தது" என்று சீத்தலைச் சாத்தனார் திடீரென்று கேட்டார் மன்னா, ஒருவேளை, நீங்கள் ஒரு வேற்றுப் பெண்மேல் மோகம் கொண்டு அரசியை முற்றிலுமாக மறந்து போவீர்களானால் என்ன ஆகும்? அந்தச் சூழ்நிலையை உங்கள் மனைவி, அரசியார் எப்படி எதிர் கொள்வார்?

அரசன் திகைத்துப் போனான் புலவரே, ஏன் திடீரென்று இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும்
அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஜனாதிபதி மட்டுமல்ல பிரதமரும் பதவி விலகட்டும்

*நெய்திரண்டு வந்தபோது தாழி உடைந்தது போல...* என்ற சொற்றொடர் நம் தமிழ் மொழியில் உண்டு.

உண்மை, ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற்று மகிந்த ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகக்கூடிய நேரம் நெருங்கியபோது, ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஆசை நாட்டு மக்களை எங்கேயோ கொண்டு போய் விட்டுவிட்டது.

இங்குதான் நெய்திரண்டு வந்தபோது தாழி உடைந்தது போன்ற நிலைமை ஆயிற்று.

எனினும் ஒரு சிறு திருத்தம். தாழி உடைந்தது என்பதற்குப் பதிலாக தாழி உடைக்கப்பட்டது என்று கூறுவதே பொருத்தம்.

அந்தத் தாழியை உடைத்தது யார் என்று கேட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பதே அதற்குப் பதிலாக இருக்கும்.

சரி, பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க என்னபாடுபட்டும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு அவர் செய்திருந்தால்கூட, பரவாயில்லை. நாட்டில் ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டபோது ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்து நாட்டைக் காப்பாற்றினார் என்றேனும் மக்கள் அமைதிப்பட முடியும்.

ஆனால் ரணில் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்த பின்புதான் நிலைமை இன்னும் மோசமாகியது.

ஆம், எரிபொருள் தட்டுப்பாடு உச்சகட்டத்தை அடைந்துள்ளது. மாறாக பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயர்த்தப்படுகின்றன.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. கறுப்புச் சந்தையில் எரிபொருள் விற்பனையில் பொலிஸாரே ஈடுபட்டுள்ளனர் என்ற தகவல் இந்த நாட்டின் நிலைமை எப்படியுள்ளதென்பதை காட்டி நிற்கிறது.

இதற்கு மேலாக, அடுத்துவரும் வாரங்களில் உணவுப்பொருட்களுக்காக வரிசையில் காத்து நிற்கும் பரிதாபம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதுவே நிலைமையானால் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்தமை மிகப்பெரும் தவறல்லவா?

ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் உச்சகட்டத்தை நெருங்கும்போது, தன் கட்சியின் ஒற்றை எம்.பியாக இருந்த ரணில் எதற்காகப் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்தார்?

ஆக, நாளை 9ஆம் திகதி நடைபெறவிருக்கும் அரசாங்கத்துக்கு எதிரான மாபெரும் அகிம்சைப் போராட்டத்தில் ஜனாதிபதி கோட்டாவை மட்டும் வீடு செல்லுமாறு கேட்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகி வீடு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

அதாவது ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரையும் வீட்டுக்கு அனுப்பினால் மட்டுமே ஒரு புதிய அரசாங்கம் எழுச்சி பெற முடியும்.

# மயங்கி விழுந்து மரணமான இளைஞனின் இறப்பிற்கு டெங்கு நோயே காரணம்

(கரணவாய்)

பருத்தித்துறையில் மயங்கி விழுந்து மரணமான இளைஞனின் இறப்புக்கு டெங்கு நோய் தாக்கமே காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வீட்டிலிருந்து மருத்துவரிடம் அவரை அழைத்துச் சென்ற போது இடைநடுவில் மயங்கி விழுந்துள்ளார். அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார். இதன் போது மேற்படி இளைஞன் சில தினங்களுக்கு முன்னர் காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சை பெற்றதாகவும் சம்பவ தினம் அவரின் வாய்ப்பகுதி மற்றும் கண் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து அவரை மருத்துவமனைக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்து செல்ல முற்பட்ட போது அவர் மயங்கி விழுந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரேத சோதனைக்கு உத்தரவிடப்பட்டது. பிரேத பரிசோதனையில் டெங்கு நோய் தாக்கம் காரணமாக இளைஞன் உயிரிழந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-60)

## தொடருந்து கடவை அமைக்க கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(நெளுக்குளம்)

பாதுகாப்பான தொடருந்து கடவை அமைக்குமாறு கோரி செட்டிகுளம் பொதுமக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா செட்டிகுளம் துடரிக்குளம் வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் அண்மையில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்திருந்தார். இதேவேளை குறித்த கடவையில் கடந்த வருடம் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் மௌலவி ஒருவரும் மரணமடைந்திருந்தார்.

இதனையடுத்து குறித்த தொடருந்து கடவையை பாதுகாப்பானதாக அமைத்து தருமாறு கோரியே பொதுமக்களால் அப் பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-6-299)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

நெல்லியடி முச்சக்கர வண்டி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபை கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் சங்கத் தலைவர் வீ.வின்சராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6-60)

## சாவகச்சேரியில் எரிபொருள் நிலைய ஊழியர் மீது தாக்குதல்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை மதியம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து ஹெல்மெட் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஊழியர் முகத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்ட எரிபொருள் தொடர்பாக எழுந்த வாக்குவாதமே குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணம் எனத் தெரியவருகிறது. 22 வயதான எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.30)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

'ட' எனும் எழுத்தை எழுத்தறிவில்லாதவன் கோடு என்கிறான். அதே போன்றுதான், கடவுள் தன்மை பொருந்திய விக்கிரகங்களை கல் என்கின்றனர். கல்லும் அதுதான், கடவுளும் அதுதான். உணர்ந்தவன் கடவுளாகவும் உணராதவன் கல்லாகவும் பாவிக்கின்றனர்.

காலையில் கல்-மாலையில் புல். அதிகாலையில் படித்தவற்றை மாலையில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஓய்வு நேரங்களில் காலையில் கல்லின் மேலும் மாலையில் புல் தரைகளிலும் உட்காருகின்றோம்.

கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் கோயில்களில் தீர்க்கமாக இருந்து அருள் பாலிக்கிறார். பசுவின் உடல் முழுவதும் பால் இருந்தாலும் மடியில்தான் கறக்கின்றோம். கோயில் வழிபாடு சிறந்தது.

தன்னிடத்தே வந்த நீருக்கு பாலானது தன் உருவமும் மதிப்பும் அந்தஸ்தும் கொடுக்கின்றது. பாலைக் காய்ச்சி நீரைப் பிரிக்கின்றபோது பால் பொங்கி தன் நண்பனான நீருக்காக உயிர்த்தியாகம் செய்கின்றது. பால் பொங்கி வழியும் போது சிறிது நீரை விட்டால் நீரைப் பார்த்த கணத்தில் பால் அடங்கி விடுகின்றது. பால் போன்றது மனது என்பது இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிள் பறிகொடுத்தவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

### யாழ்.பொலிஸ் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஆறு துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மீட்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளின் இலக்கம் தொடர்பில் தற்போது வரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் எதுவும் பதியப்படவில்லை எனவே யாழ்ப்பாண நகரப் பகுதியில் சைக்கிள்களை பறிகொடுத்தவர்களை யாழ்ப்பாண பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ளார்கள். அத்தோடு நேற்று முன்தினம் மதியம் யாழ். நகரப் பகுதியில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை தொடர்பில் திருடப்பட்ட இடத்திற்கு அருகில் இருந்த கடை ஒன்றின் சிசிடி கேமராவின் உதவியுடன் சைக்கிள் திருடியவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவரிடமிருந்து 6 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

## ஐஸ் போதைப்பொருளுடன் யாழ். நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் கொண்டு சென்ற ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர் மானிப்பாய் வீதி சத்திரச் சந்திக்கு அண்மையில் வைத்து நேற்று மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் குருநகர் ஐந்துமாடி பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர். (ம-7)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எப்படி ஆசை உண்டாகிறது?

1. இனிமையான அனுபவம், கடந்தகால எண்ணப்பதிவுகள் ஆகியவற்றின் நினைவால் ஆசை உண்டாகிறது.

2. கேட்டலின் மூலம் ஆசை உண்டாகலாம்.

3. சில மனிதர்கள் அல்லது இடத் தொடர்பால் சேர்வதனால் ஆசை எழலாம்.

4. மற்றொருவரின் தேவை அல்லது ஆசை உங்கள் சொந்த ஆசையாக உங்களுக்குள் தோன்றலாம். (உதார ணம்) பசியாக இருக்கிறார் ஒருவர். அவருக்கு உணவு ஊட்ட வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு வருகிறது. உங்களுடன் பேச விரும்புகிறார் ஒருவர். அவருடன் பேச வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு வருகிறது.

5. விதி அல்லது நீங்கள் பங்கேற்க வேண்டிய ஒரு நிகழ்ச்சி ஆசையைத் தூண்டலாம். ஆனால், செயல்களுக்கான காரணம், உங்களுக்கே தெரிவதில்லை. (உதாரணம்) கனடா நாட்டின் கியூபெக் நகரைச் சேர்ந்த ஒருவர் 30 ஆண்டுகளாக பண்ணையில் வேலை செய்பவர். எதற்காகச் செய்கிறோம் என்று தெரியாமலே நிலத்தைத் திருத்தி பாதைகள் அமைத்துக் கொண்டிருந்தார். மான்ட்ரீல் ஆசிரமம் அந்தப் பண்ணையில் அமைந்தது.



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 26

இது ரஷ்ய ஆதிக்கம் மற்றும் மேலாதிக்கத்தை நோக்கமாகக் கொண்டது. ரஷ்யமயமாக்கலின் முக்கிய பகுதிகள் அரசியல் மற்றும் கலாசாரம் ஆகும். அரசியலில், ரஷ்யமயமாக்கல் ஒரு அங்கம் ஆகும். அதாவது ரஷ்ய நாட்டவர்களை தேசிய நிறுவனங்களில் முன்னணி நிர்வாகப் பதவிகளுக்கு நியமித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கலாசாரத்தில், ரஷ்யமயமாக்கல் என்பது உத்தியோகபூர்வ வணிகத்தில் ரஷ்ய மொழியின் ஆதிக்கம் மற்றும் தேசிய மொழி களின் மீது ரஷ்ய மொழியின் வலுவான செல்வாக்கு ஆகும். ரஷ்ய இன மக்களுக்கு ஆதரவாக மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்கள் சில சமயங்களில் ரஷ்ய மயமாக்கல் வடிவமாகவும் கருதப்படுகிறது.

ஷெர்பிட்ஸ்கியின் ஆட்சியின் போது, உத்தியோகபூர்வ அரச கொள்கைகளில் இருந்து கருத்து வேறுபாடு கொள்ளத் துணிந்த புத்திஜீவிகளின் எந்தவொரு உறுப்பினரையும் சிறையில் அடைக்கும் பாரிய கைதுகள் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் கைதிகளின் தண்டனை காலாவதியானதும், வேறு குற்றச் செயல்களின் குற்றச்சாட்டின் பேரில் மீண்டும் கைது செய்யப்பட்டு புதிய தண்டனைகள் வழங்கும் நடவடிக்கை அதிகளவில் தொடர்ந்தன.

**ஷெர்பிட்ஸ்கியின் ஆட்சியின் போது, உத்தியோகபூர்வ அரச கொள்கைகளில் இருந்து கருத்து வேறுபாடு கொள்ளத் துணிந்த புத்திஜீவிகளின் எந்தவொரு உறுப்பினரையும் சிறையில் அடைக்கும் பாரிய கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.**

மனநல நிறுவனங்களில் சிறைவாசம் என்பது அரசியல் அடக்கு முறையின் ஒரு புதிய முறையாக மாறியது. ஷெர்பிட்ஸ்கிக்கு முன்னிருந்த ஷெலெஸ்டின் கீழ் செழித்து வளர்ந்த உக்ரைனிய மொழிப் பத்திரிகை, அறிவார்ந்த மற்றும் கலாசார அமைப்புகள் ஷெர்பிட்ஸ்கியால் ஒடுக்கப்பட்டன. ஷெலெஸ்ட் பொது நிகழ்ச்சிகளில் உக்ரைனிய மொழி பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் ஷெர்பிட்ஸ்கியும் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் ரஷ்ய மொழியில் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அக்டோபர் 1973 இல் சக கட்சி உறுப்பினர்களிடம் ஷெர்பிட்ஸ்கி ஆற்றிய உரையில், "சர்வதேசவாதி" உக்ரைனியர்கள் நமது நாட்டின் அனைத்து மக்களுக்கும் நட்பு மற்றும் சகோதரத்துவ உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். முதலில் சிறந்த ரஷ்ய மக்களுக்கு எதிராக உள்ள அவர்களின் கலாசாரம், அவர்களின் மொழி என்பன கைவிடப்படல் வேண்டும் என்று கூறியிருந் தார். மேலும் "உக்ரைனிய மக்களின் மோசமான எதிரி" உக்ரைனிய முதலாளித்துவ தேசிய வாதம் மற்றும் சர்வதேச சியோனிசம் (Zionism) என்றும் ஷெர்பிட்ஸ்கி கூறினார். சியோனிசம் என்ற இயக்கம், யூத மக்களுக்கு ஒரு தாயகத்தை நிறுவுவதற்கும் ஆதரவளிப்பதற்கும் வலியுறுத்துகிறது.

ஷெர்பிட்ஸ்கியின் அதிகாரத்தளம் சோவியத் குடியரசுகளில் மிகவும் ஊழல் நிறைந்த மற்றும் பழமைவாதமாக இருந்தது. 1972 முதல் 1989 வரை, உக்ரைனின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்தது.

மேலும் கடுமையான சிக்கல்கள் குறிப்பாக இரும்பு உலோகம் மற்றும் நிலக்கரி சுரங்கத் தொழில்களில் ஏற்பட்டன. தொடர் வறட்சி, ஊக்கத் தொகை இல்லாமை மற்றும் கூட்டுப் பண்ணை நிர்வாகத்தில் அதிகபடியான மையப்படுத்தல் ஆகியவற்றால் விவசாய உற்பத்தி மோசமாகப் பாதிக்கப்பட்டது. சோவியத் எரிசக்தி கொள்கை அணுசக்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. ஏப்ரல் 1986 இல் உக்ரைனில் உள்ள அணுமின் நிலையங்களில் ஒன்று, கீவ்வின் வடமேற்கே செர்னோபில், வரலாற்றில் மிக மோசமான அணு விபத்தைச் சந்தித்தது.

20 செப்டம்பர் 1989 இல், மைக்கேல் கோர்பச்சேவ் மூலம் உந்தித் தள்ளப்பட்ட பழமைவாத உறுப்பினர்களை அகற்றியதில் ஷெர்பிட்ஸ்கி தனது பொலிட்பீரோ உறுப்பினர் பதவியை இழந்தார். எட்டு நாட்களுக்குப் பிறகு, கீவ்வில் கோர்பச்சேவ் தலைமையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அவர் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலிருந்து நீக்கப்பட்டார்.

**20 செப்டம்பர் 1989 இல், மைக்கேல் கோர்பச்சேவ் மூலம் உந்தித்தள்ளப்பட்ட பழமைவாத உறுப்பினர்களை அகற்றியதில் ஷெர்பிட்ஸ்கி தனது பொலிட்பீரோ உறுப்பினர் பதவியை இழந்த தோடு அவர் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலிருந்தும் நீக்கப்பட்டார்.**

ஷெர்பிட்ஸ்கி 16 பெப்ரவரி 1990 அன்று நீண்டகால நோய்க்கு பிறகு இறந்தார். கமியன்ஸ்கேயில் உள்ள ஷெர்பிட்ஸ்கியின் பெயரால் பெயரிடப்பட்ட ஒரு தெரு, உக்ரைனிய கம்யூனிசிய சித்தாந்த அழித்தல் (Decommunization) சட்டங்களின் காரணமாக 2016 இல் வியாசெஸ்லாவ் சோர்னோவில் தெரு என மறுபெயரிடப்பட்டது. அதே ஆண்டில், டினிப்ரோவில் (முன்னர் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க்) அவரது பெயரிடப்பட்ட ஒரு தெரு ஓலேனா பிளாவட்ஸ்கி ஸ்ட்ரீ என மறுபெயரிடப்பட்டது. (தொடரும்)

# உக்ரைன்- ரஷ்ய போரினால் உலகில் பஞ்சம் தலைவிரித்தாடும்

## ஐ.நா.எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**ரஷ்யா-உக்ரைன் போரினால் உருவான உணவு, எரிபொருள் மற்றும் உரங்களின் விலை ஏற்றம் நாடுகளை பஞ்சத்தில் தள்ளும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதாக உலக உணவுத் திட்ட நிர்வாக பணிப்பாளர் டேவிட் பீஸ்லி தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் மாதங்களில் இந்த எண் ணிக்கை இன்னும் உயரும் ஆபத்து உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதன் விளைவாக உலகளவில் ஸ்திரமின்மை ஏற்படும். பட்டினி மற்றும் முன்னோடி இல்லாத அளவில் வெகுஜன இடம்பெயர்வுகள் அதிகரிக்கும். இந்த பேரழிவைத் தடுக்க நாம் உடனடியாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் முறையே உலகின் மூன்றாவது மற்றும் நான்காவது பெரிய தானிய ஏற்றுமதியாளர்களாக உள்ளன. அதே நேரத்தில் ரஷ்யா ஒரு முக்கிய எரிபொருள் மற்றும் உர ஏற்றுமதியாளராக உள்ளது. யுத்தம் இந்நாடுகளின் ஏற்றுமதியை சீர்குலைத்துள்ளது. உலகெங்கும் உணவுப் பொருட்களின் விலைகள் முன்னொருபோதும் இல்லாதளவு அதிகரித்துள்ளன.

ஏற்கனவே கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட விநியோகச் சிக்கல்களால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வரும் வளரும் நாடுகள் உக்ரைன் - ரஷ்யப் போரின் விளைவுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்ய- உக்ரைன் போர், காலநிலை மாற்றம், பொருளாதார நெருக்கடி மற்றும் ஏற்றத்தாழ்வுகள் தீவிரமடைந்து வருவதால் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்தின்மை மேலும் தீவிரமடையும் என நேற்று முன்தினம் புதன் கிழமை வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் 11 மில்லியன் மக்கள் ஆரோக்கிய மற்ற உணவுப்பழக்கத்தால் இறக்கின்றனர். உணவுப் பொருட்களின் விலை உயர்வு இவ்வாறான இறப்புக்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்கும் ஆபத்து ஏற்படும். என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார். (நி-6)

# பணவீக்கம் காரணமாக சிம்பாவேயில் தங்க நாணயங்கள்

(சிம்பாவே)

அதிக பணவீக்கம் காரணமாக சிம்பாவே அரசாங்கம் நாணய புழக்கத்திற்கு பதிலீடாக தங்க நாணயங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அந்த நாட்டின் மத்திய வங்கியானது எதிர்வரும் 5 வருடங்களுக்கு எவ்வாறு சட்ட ரீதியாக, அமெரிக்க டொலரை ஈட்டுவது தொடர்பில் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. இதேவேளை, இந்த மாதத்தில் சிம்பாவே நாட்டின் பிரதான வட்டி வீதம் 200 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சர்வதேச தகவல் தெரிவிக்கின்றன.

அதேநேரம், அந்த நாட்டின், டொலருக்கு நிகரான பெறுமதியானது ஏனைய முக்கிய நாடுகளின் நாணயங்களுடன் பெறுமதியுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்துள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 22 கரட் தங்க நாணயங்கள் புழக்கத்திற்கு விடப்படும் என அந்த நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநர் ஜோன் பி மங்குட்யா அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளார். (நி-6)

# சிறைச்சாலை மீது குண்டுத்தாக்குதல் 600 கைதிகள் தப்பியோட்டம்

## நைஜீரியாவில் சம்பவம்



(அபுஜா)

நைஜீரியாவில் சிறைச்சாலை ஒன்றின் மீது பயங்கரவாதிகள் குண்டுத் தாக்குதல் நடத்திய நிலையில், 600 கைதிகள் தப்பியோடியுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவில் உள்ள சிறை மீதே பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சிறையின் சுவர் இடிந்து விழுந்தது. இதையடுத்து 600 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ளனர். இந்தத் தாக்குதலில் சிறைக் காவலர் ஒருவர் பலியானார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த போகோ ஹறாம் அமைப்பைச் சேர்ந்தவர்களை விடுவிக்கவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 300 லீற்றர்...

திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 3 பரல்களுடன் சுமார் 300 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

எரிபொருளை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வோர் தொடர்பில் தகவல் வழங்கி பொதுமக்கள் ஒத்துழைத்தால் கறுப்புச் சந்தை நடைமுறையை தடுக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33,104)

## நாடெங்கும்...

யில் நடைபெற்ற கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிரணி கட்சிகள் சார்பில் கலந்துகொண்ட மனோ கணேசன் ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது,

"நாடெங்கும் நாளை 9ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள முழு அடைப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையாக பங்குபெறும். இதன்படி மலையகத் தோட்டங்களில் அன்றைய தினம் பணிகளில் ஈடுபடாமல், அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தோட்ட வதிவாளர்களைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம்.

அதேபோல் கொழும்பு உட்பட நகரங்களில் வர்த்தக நிலையங்களையும் அலுவலகங்களையும் மூடி, முழுமையாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படியும், தமது வேலைத்தள பணியாளர்களையும் அரச எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொள்ள இடமளிக்கும்படியும் அனைத்துத் தரப்பினரையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம்" என்றார். (ம-7)

## அரசுக்கு எதிர்ப்பு...

ஒன்பதாம் திகதி சுற்றிவளைப்போம் என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் வத்தளை பகுதியிலும் பிக்குமார் உள்ளிட்ட பலர் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## ஆர்ப்பாட்டங்...

கத்திற்கு எதிராக தலைநகரில் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க பல அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

இதனால், கொழும்பு கோட்டை பொலிஸாரால், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் கேமிந்த பெரேரா அதனை நிராகரித்துள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஏதேனும் குற்றங்கள் இடம்பெற்றால், அது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளமையால், குறித்த கோரிக்கையை நிராகரிப்பதாக நீதவான் அறிவித்துள்ளார். (ம-7)

## அமைதியான...

தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் இது தொடர்பாக நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சு, கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்குள்ள உரிமைக்கு இலங்கை பொலிஸார் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மதிப்பளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் உள்ள அதிகாரிகளுக்கு இது தொடர்பாக பொலிஸ் தலைமையகம் அவ்வப்போது தொடர்ச்சியான ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்கும் போது, ஏனையவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாதவாறு செயற்பட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாக பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## பெற்றோலிய...

களைப் பெறுவதற்கான ரூபாய் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் கிடையாது எனவும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தமது செலவுகளுக்கான பணத்தை திறைசேரியிடம் கோரி நிற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் உரிய நேரத்தில் விலைத் திருத்தத்தை மேற்கொள்ளாததன் விளைவையே இவ்வாறு தற்போது அனுபவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழ்.மேலதிக...

தர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இதன்பிரகாரம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் சுண்டிக்குழி ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் வரிசையில் காத்து நின்ற 1000 மோட்டார் சைக்கிள்கள், 400 முச்சக்கரவண்டிகள், 100 கார்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கு அடுத்துவரும் விநியோகத்தில் பெற்றோல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் ஆயிரத்தைக் கடந்த மோட்டார் சைக்கிள்களுக்கு 1001 இலக்கத்திலிருந்தும் முச்சக்கர வண்டிகள் 401 இலக்கத்தில் இருந்தும் கார்கள் 101 இலக்கத்தில் இருந்தும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உரிமையாளரின் பெயர், வாகன இலக்கம், தொலைபேசி இலக்கம் ஆகியனவும் பதிவு செய்யப்பட்டன.

இவர்களுக்கான பெற்றோல் வழங்கும் திகதிகள் குறுந்தகவல்கள் மூலமும் செயலிகள் மூலமும் தெரியப்படுத்தப்படும்.

இவர்கள் தமது எரிபொருள் பங்கீட்டு அட்டையைக் காண்பித்து உரிய தினத்தில் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேபோல அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கான பெற்றோல் விநியோகமானது டோக்கன் மூலம் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரிடம் டோக்கன் வழங்கப்பட்டு அவர் அதனை முன்னுரிமை அடிப்படையில் தனது பணியாளர்களுக்கு வழங்கி அதன்மூலம் அவர்களுக்குப் பெற்றோல் கிடைக்க ஏற்பாடு செய்வார்.

இந்த நடைமுறை மூலம் மக்கள் பெற்றோலுக்காக நீண்டநேரம் காத்து நிற்க வேண்டிய தேவை இருக்காது என்று யாழ்.செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது. (ம)

## நாட்டில் மீண்டும்...

யாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், 9ஆம் திகதிக்கு முன்னர் அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்துவதற்கான அதிக சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த மாதங்களிலும் ராஜபக்ஷக்களை பதவி விலகுமாறு கோரி மக்கள் போராட்டங்கள் பாரியளவில் முன்னெடுக்கப்பட்ட போதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சனி, ஞாயிறு...

காக அரசு சனி, ஞாயிறு தினங்களில் பொதுமுடக்கத்தினை அறிவிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை தவிர்ப்பது நல்லதாகும். (ம-7)







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் விநியோகிக்காததால்

# காரைநகரில் பொதுமக்கள் வீதியை முடக்கி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் - வலந்தலை சந்தியை முடக்கி பொது மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலந்தலை சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் பம் நேற்று முன்தினம் பழுதுபட்டது. ஆகையால் அந்த பம்பினை திருத்தம் செய்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையம் முயற்சிக்கவில்லை எனக்கூறி பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மேலும் தெரிவிக்கையில், எரிபொருளை பெறுவதற்கு நாங்கள் 5 நாட்களுக்கும் மேலாக வரிசையில் வந்து காத்திருக்கின்றோம். ஆனால் நேற்று (நேற்று முன்தினம்) காலை எரிபொருள் நிரப்பும் பம் பழுதாகிவிட்டதாக கூறி எரிபொருள் நிரப்புவதனை இடை நிறுத்தினார்கள். ஆனால் அந்த பம்பினை திருத்துவதற்கு ஏற்பாடு செய்யவில்லை. நாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தான் வரிசையில் காத்திருக்கின்றோம் என்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் கூறுகையில்,

பழுதடைந்த பம்பினை திருத்தம் செய்யும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் புத்தளத்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றார். அவர் வந்ததும் பம்பினை திருத்தம் செய்துவிட்டு இன்று காலை (8) 6 மணிக்கு எரிபொருள் வழங்க ஆரம்பிப்போம். தற்போது வரிசையில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் டோக்கன் விநியோகிப்போம். அதன்படி மோட்டார் சைக்கிள்களுக்கு 1500 ரூபாய்க்கும், முச்சக்கரவண்டிகளுக்கு 2500 ரூபாய்க்கும் பெற்றோல் வழங்குவதாகவும், டீசல் வாகனங்கள் அனைத்திற்கும் 7500 ரூபாய்க்கு எரிபொருள் வழங்குவதாகவும் உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து வீதி முடக்கலை மக்கள் கைவிட்டனர். (ம-7,33,104)


## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி A9 வீதியில் Modern Hospital முன்பாக சிவன் கோவில் சந்தியில் மங்களா தளபாட விற்பனை நிலையம் இயங்கி வந்த வீடு வாடகைக்கு உண்டு.

(5 அறை, 3 Hall, சமையலறை, மலசலகூடம், வாகனத் தரிப்பிடம், நல்ல தண்ணீர் வசதியுடைய மிகப்பெரிய வீடு)

தொடர்புகளுக்கு : மா.செல்வரட்ணம் (12082)

077 255 6691
021 221 3590

குமரகோட்டம், கோண்டாவில் வடக்கு.


## சுகாதார ஊழியர்களுக்கான

# எரிபொருள் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தம்

(கொழும்பு)

வெள்ளிக்கிழமைகளில் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் அடுத்த 48 மணிநேரத்திற்குட்பட்ட காலத்தில் நடைமுறையில் இருக்காது என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் பெறுவதற்கான புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைவரத்தை ஆய்வு செய்த பிறகு புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

### எரிபொருள் வரிசையில் மேலும் இருவர் மரணம்

எரிபொருள் வரிசையில் மேலும் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

பம்பலப்பிட்டி ஐஓசி எண்ணெய் வரிசையில் ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மற்றைய மரணம்பயாகல எரிபொருள் வரிசையில் இருந்து பதிவாகியுள்ளது.

3000 ரூபாய் மதிப்பிலான எரிபொருளை பெறுவதற்காக அவர் 3 நாட்களாக வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4569)




Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடிப்புத்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## வேலையாள் தேவை

வட மாகாணத்தில் உள்ள வீட்டில் தங்கி வீட்டையும் 3 விலங்குகளையும் பராமரிக்க பொறுப்புக்கள் குறைந்த ஒருவரைத் தேடுகிறோம். உண்மையாக வேலை தேடுபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (C-4582)

0041789629985
Viber/ Whatsapp


# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா

( முன்னாள் தலைவர், மரபுவழி அறங்காவலர் – நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபை. ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர் – வேலணை )

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் அறங்காவலர் சபையின் மரபுவழி அறங்காவலராகவும் நீண்ட காலம் தலைவராகவும் திகழ்ந்து இக்கட்டான காலகட்டத்தில் கோயிலின் நித்திய, நைமித்திய கிரியைகள் தொய்வின்றி ஒழுங்காக நடைபெறுவதற்கு முன்நின்று வழிநடத்தியவரும் ஆலய வளர்ச்சியில் அயராது உழைத்தவரும் தனது திருமுறைப் பண்ணிசையால் அம்பாளுக்கு இசையர்ப்பணம் செய்தவரும் நயினை மக்களின் காவலனாகத் திகழ்ந்தவருமான நயினை பெற்ற பெருமகன் **கா.ஆ. தியாகராசா** அவர்கள் அம்பாளுடைய மஹோற்சவ காலத்துள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து அம்பாளுடைய பாதார விந்தங்களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா அம்பாளின் பாதங்களில் சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

(C-4585)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.